


தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவுறுத்தலின்படி மதுரை கிழக்கு தொகுதி முழுவதும் கிராமம் கிராமமாகச் சென்று மக்களை நேரில் சந்தித்து அவர்களது குறைகளைக் கேட்டறிந்து அதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வரும் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி சுற்றுப்பயணத்தின் ஒரு பகுதியாக மதுரை கிழக்கு தொகுதி மேற்கு ஒன்றியத்திற்கு உட்பட்ட கிராமப் பகுதிகளில் பொதுமக்களை சந்தித்தார். அமைச்சர் சுற்றுபயணத்தின் போது மாவட்ட ஊராட்சி செயலாளர் விசாலாட்சி, ஊரக வளர்ச்சித் துறை உதவி இயக்குனர் அரவிந்த் உள்ளிட்ட அனைத்துத் துறை அரசு அதிகாரிகள், ஒன்றிய செயலாளர் சிறைச்செல்வன், முன்னாள் ஒன்றிய சேர்மன் வீரராகவன் உள்ளிட்ட திரளான கழக நிர்வாகிகள், கழகத்தினர், பொதுமக்கள் பங்கேற்றனர்.



திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் சட்டமன்றத் தொகுதி தொப்பம்பட்டி வடக்கு ஒன்றியம் பாலப்பன்பட்டி ஊராட்சியைச் சேர்ந்த மாற்றுக் கட்சியினர் உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி முன்னிலையில் தங்களை தி.மு.க.வில் இணைத்து கொண்டனர். இந்நிகழ்வின் போது வடக்கு ஒன்றிய செயலாளர் பி.சி. தங்கம் உள்ளிட்ட நிர்வாகிகள் உடன் உள்ளனர்.

# போயர் சமுதாய மக்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்படும்!

## அமைச்சர் கே.என்.நேரு பேச்சு!



*திருச்சி, ஜன.1-*

திருச்சியில் போயர் சமுதாய நலச்சங்கம் முதலாம் ஆண்டு விழா திருச்சி மாவட்ட தலைவர் மாநில ஒப்பந்ததாரர் ரங்கசாமி தலைமையில் திருச்சி மத்திய பேருந்து நிலையம் அருகே உள்ள தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்றது. இந்த விழாவில் நகராட்சி நிர்வா கத்துறை அமைச்சர் கே.என். நேரு கலந்து கொண்டு நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்புரையாற்றினார்.

இந்த விழாவில் பேசிய அமைச்சர் கே.என்.நேரு..

போயர் சமுதாயம் மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளதால், அவர்களின் கல்வி, வேலைவாய்ப்பு மற்றும் முன்னேற்றத்திற்காகத் தனி நல வாரியம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

இது குறித்து சமுதாயத் தலைவர்கள் முதலமைச்சரைச் சந்திக்க ஏற்பாடு செய்யப்படும். காமராஜர் நகர் பகுதியில் 50 ஆண்டுகளுக்கும் மேலாக வசித்து வரும் மக்களுக்கு, தகுதியான இடமாக இருந்தால் இன்னும் ஒரு மாத காலத்திற்குள் வீட்டுமனை பட்டா வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

சமுதாய மக்கள் அரசு ஒப்பந்தப் பணிகளில் (Tenders) ஈடுபடத் தேவையான தகுதிகளைப் பெற்று பதிவு செய்துகொள்ளுமாறு அறிவுறுத்தினார். அவர்களுக்குத் தேவையான ஒத்துழைப்பு வழங்கப்படும் என உறுதி அளித்தார்.

சட்டமன்றத் தேர்தலில் சமுதாய மக்களுக்கு முன்னுரிமை அளிப்பது குறித்து முதலமைச்சரிடம் ஆலோசித்து, வெற்றி வாய்ப்புள்ள இடங்களில் வாய்ப்பு வழங்கக் கோரிக்கை வைக்கப்படும்.

தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு, குறிப்பாகப் பெரிய கட்டிடங்கள் கட்டுவது, சாலைகள் அமைப்பது மற்றும் விவசாயப் பணிகளில் போயர் சமுதாய மக்களின் உழைப்பு மிக முக்கியமானது என்று அமைச்சர் நேரு பாராட்டினார்.

இந்த நிகழ்ச்சியில் மேயர் அன்பழகன், முசிறி சட்டமன்ற உறுப்பினர் காடுவெட்டி தியாகராஜன், மத்திய மாவட்ட பொருளாளர் துரைராஜ், மாமன்ற உறுப்பினர் முத்துச்செல்வம் உள்ளிட்ட ஏராளமான போயர் சமுதாய மக்கள் கலந்து கொண்டனர்.

### நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ., எம் பன்னீர்செல்வம் எம்.எல்.ஏ. முன்னிலை!

# மயிலாடுதுறையில் கலைஞர் விளையாட்டு உபகரணங்கள்!

## அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் வழங்கினார்!

*மயிலாடுதுறை, ஜன. 1-*

துணை முதலமைச்சர் அவர்கள் காணொலி காட்சி வாயிலாக நகர்ப்புற உள்ளாட்சிகளுக்கு டாக்டர் கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் திட்டத்தை தொடங்கி வைத்ததை தொடர்ந்து மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட ரங்கில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை சார்பில் நகர்ப்புற உள்ளாட்சிகளுக்கு டாக்டர் கலைஞர் விளையாட்டு உபகரணங்களை பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் வழங்கினார்கள்.

மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட ரங்கில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை சார்பில் மயிலாடுதுறை நகராட்சி, சீர்காழி நகராட்சி, குத்தாலம் பேரூராட்சி, மணல்மேடு பேரூராட்சி, வைத்தீஸ்வரன் கோவில் பேரூராட்சி, தரங்கம்பாடி பேரூராட்சி ஆகிய நகர்ப்புற உள்ளாட்சிகளுக்கு டாக்டர் கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது நிகழ்ச்சிக்கு மயிலாடுதுறை மாவட்ட ஆட்சித் தலைவர் எஸ்.ஸ்ரீகாந்த் தலைமை தாங்கினார். மயிலாடுதுறை மாவட்ட கழக செயலாளர், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் நிவேதா எம்.முருகன், சீர்காழி சட்டமன்ற உறுப்பினர் எம்.பன்னீர்செல்வம், மயிலாடுதுறை சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ராஜ்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.நிகழ்ச்சியில் மயிலாடுதுறை, சீர்காழி நகராட்சிகளுக்கும், குத்தாலம், தரங்கம்பாடி, வைத்தீஸ்வரன் கோயில், மணல்மேடு ஆகிய பேரூராட்சிகளுக்கும் டாக்டர் கலைஞர் விளையாட்டு உபகரணங்களை பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் வழங்கி பேசுகையில்

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின் பேரில், நமது தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் நகர்ப்புறங்களில் இத்திட்டம் செயல்பட வேண்டும் என்பதற்காக நமது இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முதற்கட்டமாக ஈரோட்டில் இன்று 13 மாவட்டங்களுக்கு நகர்ப்புற உள்ளாட்சிகளுக்கான டாக்டர் கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் திட்டத்தை தொடங்கி வைத்துள்ளார்.

மயிலாடுதுறைக்கு எந்த மாவட்டத்திற்கு இல்லாத அளவிற்கு இங்கே சாய் விளையாட்டு மைதானம் இருக்கின்ற மாவட்டம் நமது மயிலாடுதுறை மாவட்டமாக உள்ளது. இங்கு இரண்டு மத்திய, மாநில அரசு விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் இங்கே இருக்கிறீர்கள். மற்றவர்களை விட விளையாட்டுக்கள் நம்மை வேறுபடுத்தி காட்டுகிறது. எல்லோரையும் பெயர் சொல்லி கூப்பிடுவோம் எல்லோரையும் மனிதர்களாக பார்ப்போம் உங்களை மட்டும் தான் வீரர்கள், வீராங்கனைகளாக அழைக்கக் கூடிய பெருமை விளையாட்டில் உள்ளவர்களுக்கு இருக்கிறது. துணை முதலமைச்சர் அவர்கள் 2024-2025 நிதியாண்டிற்கான இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையின் மானியக் கோரிக்கையின் போது டாக்டர் கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் திட்டம் விரிவுபடுத்தப்பட்டு மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சி ஆகிய உள்ளாட்சி அமைப்புகளுக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்படும் என அறிவித்தார்கள்.

அதன்படி, இன்று இத்திட்டமானது தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. மயிலாடுதுறை மாவட்டத்தில் சீர்காழி நகராட்சி, மயிலாடுதுறை நகராட்சி, குத்தாலம் பேரூராட்சி, மணல்மேடு பேரூராட்சி, தரங்கம்பாடி பேரூராட்சி, வைத்தீஸ்வரன்கோவில் பேரூராட்சி ஆகியவைகளுக்கு உட்பட்ட 123 வார்டுகளுக்கு 30 விளையாட்டு உபகரணங்கள் அடங்கிய விளையாட்டு உபகரணங்கள் அடங்கிய தொகுப்பு வழங்கப்படுகிறது. இதனை, விளையாட்டு வீரர்கள் பயன்படுத்தி தங்களது விளையாட்டுத் திறனை மென்மேலும் மேம்படுத்திக் கொள்ள வேண்டும் இவ்வாறு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர்சிவ.வீ.மெய்யநாதன் பேசினார்.

நிகழ்ச்சியில் மாவட்ட காவல் கண்கணிப்பாளர் தகோ.ஸ்டாலின், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) கோகுல். மாவட்ட வருவாய் அலுவலர் ஆர். பூங்கொடி,கழக கொள்கை பரப்புத் துணைச் செயலாளர் குத்தாலம் க.அன்பழகன், தகவல் தொழில் நுட்ப அணி மாநில துணை செயலாளர் பி.எம்.ஸ்ரீதர், தலைமை செயற்குழு உறுப்பினர் ஜி.என்.ரவி, மாவட்ட துணை செயலாளர்கள் மு.ஞானவேலன், எஸ்.செல்வமணி, ஒன்றிய கழக செயலாளர் செல்லசேது.ரவிக்குமார், மங்கை எம்.சங்கர், ப. முருகமணி, அமிர்த.விஜயகுமார், பஞ்சு.குமார், மயிலாடுதுறை நகர்மன்ற தலைவரும், மயிலாடுதுறை நகரக் கழக செயலாளர் குண்டாமணி (எ) என் .செல்வராஜ், பொதுக்குழு உறுப்பினர் நத்தம் ஏ.வின்சென்ட், ஹர்ஷத், அ.காந்தி,பேரூர் கழக செயலாளர் எஸ்.கே முத்துராஜா,

எம்.அன்புச்செழியன், அண்ணாதுரை, எம்.சம்சுதீன், குத்தாலம் பேரூராட்சித் தலைவர் சங்கீதாமாரியப்பன், தரங்கம்பாடி பேரூராட்சித் தலைவர் சுகுண சங்கரிகுமரவேல், மணல்மேடு பேரூராட்சித் தலைவர் கண்மணிஅறிவழகன், மயிலாடுதுறை நகர்மன்ற துணைத் தலைவர் சிவக்குமார், மயிலாடுதுறை நகர கழக நிர்வாகிகள் மலைக்கோயில் பிரபாகர், தெய்வநாயகம், மாரியப்பன், மற்றும் அர்ஜுன். கருணாகரன், மற்றும் அரசு அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள், விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் கலந்து கொண்டனர். முடிவில் மாவட்ட விளையாட்டு அலுவலர் உமாசங்கர் நன்றி கூறினார்.

### துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள்:

# சேலம் கிழக்கில் மாரத்தான் போட்டி!

## எஸ்.ஆர்.சிவலிங்கம் எம்.பி. - டி.எம்.செல்வகணபதி எம்.பி. பங்கேற்பு!

*சேலம்,ஜன.1-*

கழக இளைஞர் அணி செயலாளரும், தமிழக துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளையொட்டி, சேலம் கிழக்கு மாவட்டம் அரியானூரில் மாரத்தான்போட்டி நடந்தது.

தமிழ்நாடு துணை முதல்வரும், திமுக இளைஞர் அணி செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு, சேலம் கிழக்கு மாவட்டம், வீரபாண்டி தெற்கு ஒன்றிய திமுக செயலாளர் வெண்ணிலா சேகர் ஏற்பாட்டில் , அரியனூரில் இளந்தலைவர் மாநில அளவில் மாரத்தான் போட்டி நடந்தது. இதில் 20, 8, 6, 2 கிலோ மீட்டர் என நான்கு பிரிவுகளின் கீழ்போட்டி நடந்தது. போட்டியை சேலம் கிருபானந்தவாரியார் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையின் டீன் எழில் வேந்தன், அசோக் டெக்ஸ்டைல்ஸ் உரிமையாளர் மாதவராஜ் ஆகியோர் தொடங்கி வைத்தனர்.

இந்த போட்டியில் சேலம் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து, பள்ளி கல்லூரி மாணவமாணவிகள், இளைஞர்கள், பெண்கள், பொதுமக்கள் என 4,079 பேர் ஆர்வத்துடன் கலந்து

கொண்டனர். இதில் வெற்றி பெற்ற வீரர்களுக்கு, சேலம் கிழக்கு மாவட்ட செயலாளர் எஸ். ஆர்.சிவலிங்கம் எம்பி, மேற்கு மாவட்ட செயலாளர் டி.எம்.செல்வகணபதி எம்பி, மாநில இளைஞரணி துணைச் செயலாளர் ஆனந்த் ஆகியோர் கலந்து கொண்டு விருது மற்றும் சான்றிதழ் வழங்கி பாராட்டினர். இதில் வீரபாண்டி தொகுதி பார்வையாளர் கிருபாகரன், மாவட்ட அவைத் தலைவர் முரா. கருணாநிதி, மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் ப்ரண்ட்ஸ் ரமேஷ், மாநில தகவல் தொழில் நுட்ப அணி துணை செயலாளர் டாக்டர் தருண், ஒன்றிய செயலாளர் உமாசங்கர், ஏ.ஏ. ஆறுமுகம், கே.பி.எஸ். அன்பு மற்றும் விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர்கள், ஒன்றிய, சார்பு அணி நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். போட்டிக்கான ஏற்பாடுகளை வீரபாண்டி ஒன்றிய செயலாளர் வெண்ணிலா சேகர் செய்திருந்தார்.

மேலும் இந்த மராத்தான் போட்டியில் சமூகநீதி மற்றும் பெண்ணியத்தை முன்னிறுத்தி நான்காயிரம் வீரர் வீராங்கனைகள் பங்கு பெற்ற மாரத்தான் என்ற அடிப்படையில் நோபல் வேர்ல்ட் ரெக்கார்டு அமைப்பு உலக சாதனைக்கான சான்றிதழை திருமதி. ஹேமா, மாவட்ட செயலாளர்கள் எஸ்.ஆர்.சிவலிங்கம் எம்.பி., டி.எம். செல்வகணபதி எம்.பி., ஆகியோர் முன்னிலையில் ஒன்றிய செயலாளர் வெண்ணிலா சேகர் அவர்களிடம் வழங்கினார்.

# பெரம்பலூரில் புதிய பேருந்துகள்! அமைச்சர் சா.சி.சிவசங்கர் தொடங்கி வைத்தார்!

## எம்.பிரபாகரன் எம்.எல்.ஏ - வீ.ஜெகதீசன் பங்கேற்பு!

*பெரம்பலூர், ஜன.1-*

போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், பெரம்பலூர்புதிய பேருந்து நிலையத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் ந.மிருணாளினி தலைமையில் BS6 ரக 4 புதிய பேருந்துகளை கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சிக்கு பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் ம.பிரபாகரன் முன்னிலை வகித்தார். முதலமைச்சர் அவர்கள் அனைத்துத் தரப்பு மக்களின் நலனையும் கருத்தில் கொண்டு தமிழ்நாட்டின் அனைத்துப் பகுதிகளுக்குமான பேருந்து சேவையினை உறுதிப்படுத்திடும் வகையில் புதிய வழித்தடங்களையும், புதிய பேருந்துகளையும் தொடர்ந்து வழங்கி வருகின்றார்கள்.

போக்குவரத்துத்துறையில் ஒரு புரட்சியை ஏற்படுத்திடும் வகையில் மின்சார பேருந்துகள், சி.என்.ஜி பேருந்துகள், தாழ்தள பேருந்துகள், மாற்றுத்திறனாளிகள் எளிதில் பேருந்தில் ஏறி இறங்க சாய்தள வசதிகளுடன் கூடிய பேருந்துகள், BS6 ரக பேருந்துகள் என பல்வேறு வகையான பேருந்துகள் தமிழ்நாட்டில் மக்களின் பயன்பாட்டுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது,

அந்தவகையில், பெரம்பலூரில் இருந்து நாரணமங்கலம், ஆலத்தூர் கேட், பாடாலூர் வழியாக திருப்பட்டூருக்கும், வேலூர் செட்டிகுளம் வழியாக நக்கசேலத்திற்கும், அம்மாபாளையம், லாடபுரம் வழியாக மேலப்புலியூருக்கும், அரசலூர் வழியாக பிள்ளையார்பாளையத்திற்கும் என 4 புதிய பேருந்துகளை போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் கொடியசைத்து தொடங்கி வைத்தார். இந்நகிழ்ச்சியில் மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகநீசன், போக்குவரத்துக்கழக திருச்சி மண்டல பொது மேலாளர் டி. சதீஸ்குமார், நகர்மன்றத் தலைவர் திருமதி அம்பிகா ராஜேந்திரன், அட்மா தலைவர் சி.ராஜேந்திரன், கோட்ட மேலாளர் ராம்குமார், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் பா.துரைசாமி, எம்.இராஜ்குமார், பெரம்பலூர் கோட்ட துணை மேலாளர் (தொழில் நுட்பம்) எம்.எஸ்.ஜி.புகழேந்தி ராஜ், பெரம்பலூர் கிளை மேலாளர் தண்டாயுதபாணி உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# திருவள்ளூர் மேற்கில் திராவிட மாடல் அரசின் சாதனை விளக்கப் பொதுக்கூட்டங்கள்!

*திருவள்ளூர், ஜன.1-*

திருவள்ளூர் மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் திராவிட மாடல் அரசின் சாதனை விளக்க பொதுக்கூட்டம் 02-01-2026 அன்று வெள்ளிக்கிழமை மாலை 5 மணி அளவில் திருத்தணி மேற்கு ஒன்றியம் மற்றும் 03-12-2026 அன்று சனிக்கிழமை மாலை 5 மணி பூண்டி மேற்கு ஒன்றியத்தில் திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ தலைமையில் நடைபெறுகிறது

இக்கூட்டத்தில் கழக கொள்கை பரப்புச் செயலாளர் தமிழ்நாடு பாடநூல் கழக தலைவர் திண்டுக்கல் ஐ. லியோனி கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகிறார்

தமிழ்நாடு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழும் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் கழக கொள்கை பரப்புச் செயலாளரும் அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினருமான டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் தலைமை செயற்குழு உறுப்பினரும். திருவள்ளூர் சட்டமன்ற உறுப்பினருமான வி.ஜி. ராஜேந்திரன் ஆகியோர் பங்கேற்கிறார்கள்

கூட்டம் முன்னதாக திருத்தணி மேற்கு ஒன்றிய செயலாளர் என்.கிருஷ்ணன் பூண்டி மேற்கு ஒன்றிய செயலாளர் டி.மோதிலால் ஆகியோர் வரவேற்புரை ஆற்றுகிறார்கள்

இந்நிகழ்ச்சியில் தலைமை செயற்குழு உறுப்பினர் திருத்தணி எம்.பூபதி, மாவட்ட அமைத்தலைவர் க.திராவிட பக்தன் மாநில நிர்வாகிகள் ஆர்.டி.இ.ஆதிசேசன், ஒ.ஏ. நாகலிங்கம், தொகுதி பார்வையாளர்கள் சண்முகநாதன், மாஸ்டர் பெ.சேகர், தொண்டர் அணி பயிற்சியாளர் மாஸ்டர்.இ. குருதாஸ். மாவட்ட கழக நிர்வாகிகள் டாக்டர்.வி.சி.ஆர்.குமரன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



தேனி தெற்கு மாவட்டம் அனுமந்தம்பட்டி பேரூராட்சிபகுதியில் மயானத்தில் தடுப்புச் சுவர், தார்ச் சாலை, சிறுவர்களுக்கான பூங்காவை தெற்கு மாவட்டச் செயலாளர் கம்பம் ராமகிருஷ்ணன் எம்.எல்.ஏ. ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார். உடன் பேரூராட்சி தலைவர் ராஜேந்திரன்.பேரூராட்சி செயல் அலுவலர் சீனிவாசன், பேரூர் செயலாளர் ராஜ்குமார், கம்பம் ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் தேசிங்குராஜா. துணை தலைவர். விஜயா மற்றும் வார்டு உறுப்பினர்கள், கழக முன்னோடிகள், அரசு அதிகாரிகள் கலந்து கொண்டனர்.



கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆணைக்கிணங்க, கழக இளைஞர் அணி செயலாளர், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அறிவுறுத்தலின்படி, மாநகர் மாவட்டச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ. ஆலோசனையின்படி மதுரை மாநகர் மாவட்டம் காமராஜபுரம் இந்திரா நகர் பகுதியில் கழக மாநில பொதுக்குழு உறுப்பினர் 46வது வார்டு மாமன்ற உறுப்பினர் பி. விஜயலட்சுமி பாண்டியன் ஏற்பாட்டில் நடைபெற்ற என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி பூத் கமிட்டி உறுப்பினர்கள் கூட்டத்தில் கழக உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினர் பெ. குழந்தைவேலு திராவிட மாடல் அரசின் சாதனைகளை விளக்கி பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன் பகுதி செயலாளர் ஆர். எம்.முத்து, வட்ட பொறுப்பாளர் வழக்கறிஞர் பாலகுமார் பாண்டியன், பாக முகவர்கள், கழக நிர்வாகிகள், பொதுமக்கள் என ஏராளமானார் கலந்து கொண்டனர்.